Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 127
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 4 ரபி அவ். 9 ஞாயிற்றுக்கிழமை [18-6-67]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு

# உணர்ச்சியைத் தூண்டும் விஷயத்தில் அரசியல்லாபமா?

## எதிர்க்கட்சியினரிடம் மந்திரி பீரிஸ் கேள்வி

கொழும்பு, சனி

'பொதுமக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய விஷயங்களில் அரசியல் இலாபம் சம்பாதிக்க முனைய வேண்டாம்' என்று வர்த்தக அமைச்சர் டாக்டர் எம்.வி.பி.பீரிஸ் இன்று செனட் சபையில் எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொண்டார்.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதா மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து டாக்டர் பீரிஸ் பேசுகையிலேயே மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

இலங்கை-இந்தியஒப்பந்த அமுல் மசோதா இந்தநாட்டில் நாடற்றவர் என்ற ஒரு பெரிய பிரச்னையை திருப்திகரமாகத் தீர்ப்பதற்கு கிடைத்துள்ள ஒரு வழியாகும் என்றும் டாக்டர் பீரிஸ் கூறினார்.

திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் காலஞ்சென்ற இந்தியப்பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும் கைச்சாத்திட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு இதுதான் சரியான, முறையான மசோதா என்றும் இந்தியப் பிரஜாவுரிமை வழங்கி ஐந்தேகால் லட்சம் இந்தியவம்சாவழியினர் இந்தியப் பிரஜைகளானதும் பின்னர் அந்நிய செலாவணிநிலை சீரானதும் நாட்டைவிட்டுச்சென்றுவிடமுடியுமென்றும் டாக்டர் பீரிஸ் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கமும் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழிமக்களுக்குப்பிரதிநிதித்துவம் வகிக்கும் ஸ்தாபனங்களும் ஏற்றுக்கொண்டுள்ள இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு அமுல் நடத்தப்படாவிட்டால் இலங்கையின் எதிர்காலத்தைப் பற்றி ஒருவர் நம்பிக்கை கொள்ள இடமிருக்காதென்றும் அமைச்சர் டாக்டர் பீரிஸ் கூறினார்.

செனட்சபையில் இந்த மசோதா மீது மூன்றுதினங்கள் விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கட்டாயமாக நாடுகடத்த இலங்கைக்குஉரிமைஉண்டு,

### செனட்டர் டொரிக் டி சூசா

கொழும்பு, சனி

பிரஜாவுரிமை கொடுப்பது பற்றிய பொறுப்பு ஒன்றை இலங்கை தன் தலையில் போட்டுக்கொண்டிருக்கிறது. ஆனல் திருப்பி அனுப்பப்படுபவர்கள் பற்றி ஒன்றும் அக்கறை காட்டப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. டொரிக் டி சூஸா இன்று கூறினர்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல்மசோதாமீது செனட் சபையில் பேசிய அவர் கூறியதாவது! இலங்கைப்பிரஜாவுரிமை கொடுக்கப்படுபவர்களுக்கு பொருத்தமான எண்ணிக்கையினருக்கு இந்தியப் பிரஜாவுரிமை கொடுக்கவேண்டியது இந்திய அரசாங்கத்தின கடமை. அதுபற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. இந்தியச் சட்டங்களின்படி ஒருவர் பிரஜாவுரிமை கோரி மனுச்செய்தால்தான் பிரஜாவுரிமை கொடுக்கப்படும்.

[6-ம் பக்கம் பார்க்க]

## காதலன் கடிதம் வரத்தவறியதால் கன்னி தீமூட்டி தற்கொலை

உடுப்பிட்டி, சனி

காதலனின் கடிதம் வரத்தவறியமையினல் மனமுடைந்த இளம் பெண் தற்கொலை செய்து உயிரை மாய்த்த சம்பவம் புலோலியில் நிகழ்ந்துள்ளது. புலோலி மேற்கைச் சேர்ந்த கனகசபை வேலுப்பிள்ளை என்பவரின் இரண்டாவது மகளான கனகராணி [வயது 17] என்னும் இளம் பெண்ணே தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்து பரிதாப மரணத்துக்குள்ளானவராவார்.

காலஞ்சென்றவர் தனது சொந்த மச்சானை லோகசகாயம் என்பவரைக் காதலித்துவந்ததாகவும் அவரது காதலன் உத்தியோகம் காரணமாகக் கொழும்பிற்குச் சென்றதாகவும், இதனல் அவரிடமிருந்து கடந்த இரண்டு வருட காலமாக எவ்வித தகவலும் கிடைக்காததால் கனகராணி மனமுடைந்து காணப்பட்டாரென்றும், காலஞ்சென்றவர் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த பின்னர் நெசவு சாலையில் வேலைசெய்து வந்தாரென்றும் அன்றைய தினம் தனது நெசவுசாலை சிநேகிதியான சுப்பிரமணியம் சாவித்திரி [வயது 18] என்பவரிடம் 'இதுவே என்

[6-ம் பக்கம் பார்க்க]

### கொலைவழக்குகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தெல்லிப்பளை கொலை வழக்கு நேற்றுக் காலைவடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நீதியரசர் வி. தென்னக்கோன் இவ்வழக்கை அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்தி வைத்தார்.

இவ்வழக்கில் 66-ம்ஆண்டு ஏப்ரல் 7-ம் திகதி தெல்லிப்பளையில் முதலி சின்னவனை கொலை செய்ததாக ஆண்டி முதலி, நீலன் முருகன் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே.வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானர்.

பூநகரி கொலை வழக்கு நேற்றுக் காலைவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நீதியரசர் வழக்கை அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்தி வைத்தார்.

இவ்வழக்கில் 66ம் ஆண்டு மே28ம்திகதி நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் என்பவரை பீதாம்பரம் கைலாசபிள்ளை கொலைசெய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. எதிரிசார்பில் அட்வகேட் கே.வி.எஸ். சண்முகநாதன் ஆஜரானர்.

## வெள்ள அகதிகளுக்கு நிவாரண உதவி

### அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியது

கொழும்பு, சனி

ஹன்வெல பகுதியில்பெரு வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. 1947-ம் ஆண்டின் பின் இது போன்ற மோசமான வெள்ளம் இப்போதுதான் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது.

பதின்மூன்று கிராமங்களில் வெள்ளத்தினல் வீடு வாசல்களை இழந்து கஷ்டப்படும் சுமார் பத்தாயிரம் மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கு அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

ஹன்வெல, தெல்தெனியா, தெகியோவித்த, தொனியகல, எட்டியாந்தோட்டை ஆகிய இடங்களில்தான் வெள்ளச் சேதம் பெருமளவில் ஏற்பட்டிருக்கிறதாம்.

அவிசாவளையில் வெள்ளம் வடிந்து வருவதாகவும் களனி கங்கையில் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

பாலத்துறையிலும் பல குடிமனைகள் வெள்ளத்தினல் அமிழ்ந்துள்ளன. பாதுகாப்பான இடங்களில் மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

பீகிங்கில்

## இந்திய தூதரகத்தை சுற்றி முற்றுகை

### 60 பேர் அவதி

ஹாங்காங், ஜூன் 17

பீகிங்கிலுள்ள இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த சுமார் 60 பேரும், அவர்களின் குடும்பத்தினரும் தூதரகக் கட்டிடத்திலேயே சீன ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டுள்ளார்கள்.

வெளியிலிருந்த இந்தியத் தூதரக ஊழியர்கள் அனைவரும் தூதரகத்துக்குள் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் எவரும் அனுமதியின்றிவெளியேறக்கூடாதென்று சீன அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. நேற்று புதுடில்லியில் உள்ள சீனத் தூதரகத்தின் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே பீகிங்கில் இந்தியத்தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பிரிட்டிஷ் தூதரகத்தின் முன்னலும் இப்படி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### சீனவிடம் ஜலவாயு குண்டு

ஹங்காங், ஜூன் 17

சீன ஜலவாயுக் குண்டு ஒன்றை இன்று வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

காஸாவிலிருந்து

### 947 பேர் திரும்பினர்

புதுடில்லி, ஜூன் 17

காஸாவிலிருந்த ஐ. நா. துருப்புகளில் பாரதப் பிரிவைச் சேர்ந்த 131 பேர் இன்று நிக்கோஸியாவிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்தனர்.

இதுவரை காஸாவிலிருந்து 947 இந்திய சிப்பாய்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்**

ஹரிஜனங்களுக்குச் சேவை செய்வது மதக் கடமையாகும். இதில் சூதுவாதுகளுக்கு இடமில்லை. முழுக்க முழுக்கச் சத்தியமானதாகவும், அகிம்சாபூர்வமாகவும் இது நடக்க வேண்டும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 4 ஞீ ஞ (18-6-67)


## அபிவிருத்தி திட்டங்கள்

இலங்கையின் திட்டங்கள் இலங்கையின் முன்னேற்றத்துக்கு மிகக் குறைவாகவே உதவியிருக்கின்றன என்ற கருத்துப்பட புனரமைப்பு, அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் பொருளாதாரப் பிரிவுத்தலைவர் திரு. அல்பர்ட் வாட்டர்சன் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறாராம். சர்வதேச வங்கியின் பொருளாதார நிபுணரோவேறு எந்தநாட்டு நிபுணரோ வந்து ஆராய்ந்துதான் இதைச்சொல்லவேண்டுமென்பதில்லை. இலங்கை சுதந்திரமடைந்து சுமார் இருபதாண்டுகளாகின்றன. இந்த இருபது வருடங்களுக்குள் பத்துவருடத் திட்டம், ஆறுவருடத் திட்டம், ஐந்துவருடத் திட்டம் என்று பல திட்டங்கள் போடப்பட்டதும் இந்தத்திட்டங்கள் எதுவும் உருவான பயனைத் தரவில்லையென்பதும் நாடறிந்த விஷயம்.

இலங்கை விடுதலை பெற்ற சமயத்தில் சுதந்திரமடைந்த இந்தியாவும் மற்றும்பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளும் திட்டமிட்டமுறையில் பொருளாதாரத்தை விருத்தி செய்திருக்கின்றன இந்தியாவில் இலங்கையை விடப் பெரும்பிரச்னைகள் இருப்பினும் அங்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் பெரிய தொழிற்சாலைகளும், சிறியதொழிற்சாலைகளும் உருவாகி உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்திருக்கின்றன. உள்நாட்டுத் தேவையை நிறைவேற்றியிருப்பதுடன் பலபொருள்களைஏற்றுமதியும் செய்கின்றது. தனது ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அந்நிய நாடுகளிடமிருந்து இந்தியா பெருமளவு கடன்பட்டிருக்கிறது என்பது உண்மையே. இலங்கையும் வெளிநாடுகளிடமிருந்து உதவியும் கடனும்பெற்றிருக்கிறது. எனினும் உருப்படியாக எதையும் நிறைவேற்றிவிட்டதாக பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது?

அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு வகுக்கப்படவேண்டும். எந்தப் பகுதியில் என்ன இருக்கிறது; இவற்றைப் பயன்படுத்தி எதை எதை உற்பத்திசெய்யலாம் என்பதை ஆராய்ந்து, திட்டமிட்டு நாட்டிலுள்ளமூலவளங்களைப் பயன்படுத்த வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் எந்தத்திட்டமும் எந்தத் தொகுதியிலமைக்கப்படலாமென்பது பற்றியும் அடுத்த தேர்தலில் அதிகமான வாக்குகளைப் பெறுவதற்கு எந்தத் தொகுதியில் என்ன தொழிற்சாலையைத் திறக்கலாம் என்பது பற்றியும் இங்கு திட்டமிடப்படுகிறது. இதுதான் நமது துரதிர்ஷ்டத்துக்கெல்லாம் காரணம். இதுதவிர வடக்கு கிழக்குமாகாணங்களில் வாய்ப்பும் வசதியுமிருந்தாலும் கூட அதை வகுப்புவாதக் கண்கொண்டு நோக்கும் துரதிர்ஷ்டமான ஒரு பழக்கம் சென்றசில வருடங்களாக இங்கு ஆட்சியாளரிடை இருந்து வருவதும் நமது பொருளாதாரம் பின்தங்கிய நிலையிலிருப்பதற்கு முக்கியகாரணம்.

இந்தக்குறுகிய நோக்கங்களைக்கைவிட்டு நாட்டின் பொருளாதாரவிருத்தியையும் வருங்காலச் சந்ததியின் நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றைஒருமுகப்படுத்தி அமுல் நடத்த முன்வந்தால், திட்டங்களினுல் நிச்சயம் பயன் கிடைக்கும்.

---

யாழ்ப்பாணத்தில்

# பெட்ரோல் ஆராய்ச்சியின் போது எடுத்த படம் எங்கே?

## பிரெஞ்சு குழுவினர் அதிர்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பகுதியில் பெட்ரோல்ஆராய்ச்சிநடத்தி வரும் பிரெஞ்சுக் குழுவினர் நிலத்தடி பரிசோதனையின் போதெடுத்தமுக்கிய சுருள் படமொன்றுகாணுமற்போய் விட்டதாக அறியப்படுகிறது. இது பெரும் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. இப்படம் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியானதெனவும் இது முக்கிய தகவல்களைக் கொண்டதெனவும தெரிய வருகிறது.

யாழ்ப்பாணத்தின் வடபகுதியிலுள்ள பருத்தித்துறையிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள மணற்காடு என்ற இடத்தில் பெட்ரோல் ஊறுவது நிரூபணமாகிய பின் எடுக்கப்பட்ட முதற்படமே இது எனவும் இப்படம் பல முக்கிய தகவல்களைக் கொண்டிருந்ததெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தின் ஆதரவில் இங்கு பெட்ரோல் சம்பந்தமான ஆராய்ச்சி நடத்தி வரும் இந்தப் பிரெஞ்சுக் குழுவினர் இது சம்பந்தமாகப்பெரும் கவலை கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இப்படத்தைக் கண்டுபிடிப்பதில் இப்போது தீவிர நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. [ந. நி.]

---

# பிரிட்டிஷ் தூதர்களின் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கையிலுள்ள பிரித்தானிய ஸ்தானிகராலய முதலாவது காரியதரிசியான ஜேம்ஸும், இந்தியாவிலுள்ள பிரித்தானிய ஸ்தானிகராலய முதலாவது காரியதரிசியான நீட்டும் கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாணப் பகுதியில் உத்தியோக பூர்வமான சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் தமது விஜயத்தின் போது யாழ்ப்பாணம் நூதனசாலை, யாழ்ப்பாணம் கோட்டை, டச்சுத்தேவாலயம், குருநகர், பாஷையூர் ஆகிய இடங்களுக்கும் திருநெல்வேலி கிருஷிகப் பண்ணை, புத்தூர் நிலாவரை ஆழ்கிணறு, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, இராமநாதன் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மூளாய் இணுவில் ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலை ஆகியனவற்றிற்கும் விஜயம் செய்தார்கள். இவர்களுடன் பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. செல்வரத்தினம் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. ஜெயசீலன் ஆகியோரும் சென்றிருந்தார்கள். [ந. நி.]

---

### சைவப்புலவர் சங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கல்வி ஸ்தாபனங்களில் உயர்தரவகுப்புகளில் சைவசமய பாடங்களைச் சைவப்புலவர்களே கற்பிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டுமென சம்பந்தப்பட்ட கல்விஅதிகாரிகளைக் கோருவதென அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக்கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது.

சென்னை சைவசித்தாந்த சமாஜம் சைவப்புலவர் சங்கத்துக்கூடாக நடத்தும் சைவப்புலவர் பரீட்சைகளை தொடர்ந்தும் இவ்வாண்டு கொழும்பு, யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் நடத்த முயற்சிமேற் கொள்வதெனத்தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சங்க ஆதரவில் சைவப்புலவர்களையும் சமயத் தொண்டர்களையும் கொண்ட குழுவினர் இலங்கையில் சமய போதனைகளையும் சாதனைகளையும் செய்வதற்காக எதிர்வரும் ஆவணி மாதத்தில் வவனியா, அனுராதபுரம், திருக்கோணமலை மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் சென்று தொண்டாற்றுவதெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது

---

சட்டவிரோத செயல்களை தடுக்க

# வடபகுதி பொலிஸாருக்கு 'ரேடியோ கார்கள்'

காங்கேசன்துறை, ஞாயிறு

வடபகுதி பொலிசாருக்கு ரேடியோ இணைக்கப்பட்ட ஐந்து கார்கள் அடுத்த மாதத்தில் வரவிருக்கின்றன.

கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம், பெண்கடத்தல், டாக்ஸி களவு, ோக்கு வரத்துத் தடை இவற்றை நீக்குமுகமாகவே இக்கார்கள் இங்கு வருகின்றன.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன வடபகுதிக்கு சமீபத்தில் மேற்கொண்ட விஜயத்தின் பின்னரே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது.

ஒவ்வோர் நிலையங்களிலும் ரேடியோக் கார் வருவதற்காகநிலையங்களில் ரேடியோ வசதி செய்யும் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு ரேடியோக்கார்களும், காங்கேசன்துறை, வவனியா மன்னர் ஆகிய இடங்களுக்கு ஒவ்வோர் கார்களும் அனுப்பப்படவிருக்கிறது.

வடமாகாண பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனகவே ரேடியோக் கார்கள் இங்கு வருவதாகத் தெரிய வருகிறது.

ரேடியோக்கார்கள் இங்கு வருவதால் புதிய பொலிஸ் பகுதிகளும் ஒவ்வோர் நிலையங்களிலும் நிறுவப்படவிருக்கின்றது.

---

### முயற்சி பலனளித்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்துக்கு குறிப்பாகக் கச்சேரிக்கு மாற்றம் பெற்று வரும் உத்தியோகத்தர்கள் வசதி மிகவும் குறைந்த இடங்களான பூநகரி, துணுக்காய், நெடுந்தீவு, கிளிநொச்சி காரியாதிகாரிகளின் காரியாலயங்களுக்கு அனுப்பப்பட்டதால் அவர்களது யாழ்ப்பாண சேவைக்காலம் அங்கேயே கழிந்ததாகவும் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் பெற்று வந்த பொழுதும் யாழ்ப்பாணத்தில் உண்மையில்சேவை செய்ய முடியாது போவதாகவும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் கடமையாற்றுபவர்களின் சேவைக் காலம் யாழ்ப்பாணத்தில் சேவை செய்யும் நான்கு வருட சேவைக் காலத்துடன்சேர்க்கப்படக் கூடாதெனவும் யாழ். அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், அரசாங்க எழுது வினைஞர் சங்கம் ஆகியவை எடுத்து வந்த முயற்சி பலனளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது விஷயத்தில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா காட்டிய அக்கறைக்கு தமது சங்கம் மிக்க நன்றி செலுத்துவதாக அரசாங்க லிகிதர் சேவைச் சங்கக்கிளைத்தலைவர் திரு. சி. இரத்தினசபாபதி தெரிவித்துள்ளார்.

---

### மாணவர் சிரமதானம்

உடுவில், சனி

கந்தரோடைவடடாக்கை விசுவநாத சுவாமிவிசாலாட்சியம்பாள் கோவிலின் நான்குபக்க உட்புறவெளிப்புற வீதிகளை மாணவர்கள் சிரமதான இயக்க மூலம் செப்பனிட்டார்கள். சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மாணவர் [illegible] மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

---

### யாழ்ப்பாணத்துக்கு கைத்தொழில் அமைச்சர் வருகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வர இருப்பதாகத் தெரிகின்றது. ஆனையிறவிலிருந்து கச்சாய்வரை அமைக்கப்படவிருக்கும் உப்பளத்தை திறந்து வைக்கவே அமைச்சர் இங்கு விஜயம் செய்வாராம்.

சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினத்தின் அழைப்பை ஏற்று இங்கு விஜயம் செய்யும் அமைச்சருடன் அவரது பாராளுமன்றக் காரியதரிசியான திரு. ஷெல்டன் ஜெயசிங்காவும் விஜயம் செய்வாரெனத் தெரிகின்றது. அமைச்சர் தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது காங்கேசன்துறை சிமெந்துச் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆகியனவற்றிற்கும் விஜயம் செய்வாரெனத் தெரிகின்றது.

[ந. நி]

---

### தமிழக கவர்னர் நியமனம்

சென்னை, ஜூன் 17

தமிழக ராஜ்யத்தின் தற்போதைய கவர்னராகக் கடமையாற்றும் சர்தார் உஜ்ஜல் சிங், நிலையான கவர்னராக நியமிக்கப்பட்டார். தமிழக ராஜ்ய உயர்நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில், சர்தார் உஜ்ஜல் சிங் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவ்வைபவம்ராஜாஜிமண்டபத்தில் நடைபெற்றது. தமிழக அரசின் முதல் மந்திரி சி. என். அண்ணுதுரை மற்றும் அமைச்சர்கள், நகரப் பிரமுகர்களும் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

---

### தொழிலாளர் நலனும் தமிழக மந்திரிகளும

சென்னை, ஜூன் 17

தொழிலாளர்கள், முதலாளிகளுக்கிடையே நிலவும் பிரச்னைகளைத் தீர்க்கத் தொழிலாளிகள், முதலாளிகள் அடங்கிய கமிட்டிகள் உருவாக்கப்படுவது நல்லது என தமிழகஅரசின்தொழில் நல மந்திரி திரு. எஸ். மாதவன் கூறினுர்.

சென்னையில் நிர்வாகிகள் கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்.

'கேரோ' கிளர்ச்சி முறை இந்திய பீனல் விதிச்சட்டப்படி குற்றமாகுமெனத் தெரிவித்த திரு. மாதவன், கேரோவைத் தமிழக அரசாங்கம் அங்கீகரிக்கவில்லையெனக் குறிப்பிட்டார். 'கேரோ' சம்பந்தமாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும்படி, தமிழகப் பொலிசாருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினுர்.

தொழில் மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், நிர்வாகிகள் தமது ஆலைகளில் தொழிற்சங்கங்களை நிறுவ முயற்சி எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

---

### திருப்பதிமலைக்கு புதிய பாதை

திருப்பதி, ஜூன் 17

திருப்பதி மலைக்குச் செல்லும் யாத்திரிகர்களின்வசதிக்கு என இரண்டாவதுமலைப் பாதை ஒன்றை அமைக்கத் திருப்பதி தேவஸ்தானம் தீர்மானித்துள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் திருப்பதிக்கு வருவதால், இப்போதிருக்கும் ஒரேயொரு மலைப் பாதை போதாதென்பதினுலேயே இந்த இரண்டாவது மலைப்பாதை திறக்கப்படவிருக்கிறது, யாத்திரிகர்களின் வசதிக்காக கயிற்றுப் பாலம் ஒன்றையும் அமைப்பதெனதேவஸ்தானம்முடிவு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஸிஜின், டி கோலே சந்தித்து பேசினுர்

## மேற்கு ஆசிய நிலைமை பற்றி இரண்டு மணி நேர விவாதம்

பாரிஸ் ஜுன்17

ஐ. நா பொதுச்சபையின் அவசர கூட்டத்துக்குச் செல்லும் வழியில் சோவியத் பிரதமர் திரு.கொஸிஜின் பாரிஸில் பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டிகோலுடன் மேற்கு ஆசிய விவகாரம்பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்தினுர். இப்பேச்சுவார்த்தைகள் 2 மணித்தியாலங்கள்நீடித்தன. பின்னர் இருநாட்டு வெளிவிவகார மந்திரிகளும் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்

பேச்சுவார்த்தைகளின்பின், பத்திரிகையாளரிடையே பேசுகையில், தான் ஐ நா.வுக்குச் செல்லும் நோக்கம், மேற்கு ஆசியாவில் ஒரு சமாதானத் தீர்வை ஏற்படுத்த வழிவகையைக் காண்பதற்காகவே என சோவியத் பிரதமர் கொஸிஜின் கூறினுர்.

அவர் நியுயோர்க்கில் தங்கியிருக்கையில், ரஷ்ய-அமெரிக்க உச்சிமகாநாடொன்று அங்கு நடைபெறும்வாய்ப்பு உண்டாவெனப் பத்திரிகையாளர் அவரிடம் கேட்டபொழுது, அமெரிக்காவிலான தனது நிகழ்ச்சி நிரல் இன்னும் திட்டமாக வரையறுக்கப்படவில்லை என்ருர் கொஸிஜின்.

### ஜோன்ஸன் தயாராகிருர்

இதற்கிடையில் அமெரிக்க ஜனுதிபதி, மேற்குஆசிய விவகாரத்தில் அமெரிக்க நிலையை உறுதிப்படுத்துவதற்கான வழிவகைகளைத் தமது அதிகாரிகளுடன் ஆராய்ந்தார். அத்துடன் ரஷ்யப் பிரதமருடன் நடைபெறக் கூடிய பேச்சுவார்த்தைகளுக்கான ஆயத்தங்களையும் செய்துகொண்டுள்ளார்.

மாஸ்கோவுக்குச் சென்றுவிட்டு நியுயோர்க்குக்குநேற்றுத்தான் திரும்பிவந்த சோவியத் தூதுவரை, அமெரிக்க ராஜாங்க பாதுகாப்புக் காரியதரிசி திரு. டீன் ரஸ்க் சந்தித்து முக்கால் மணி நேரம் பேசினுர்.

### ஐ. நா. பொதுச்சபை மாலை கூடுகிறது

ஐ. நா. பொதுச்சபையின் அவசரகூட்டம் இன்று மாலை ஆரம்பமாகிறது. இக்கூட்டம் கூடுவதற்கு அமெரிக்க,இஸ்ரேல் தூதுகோஷ்டிகள் இரண்டும் மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

சம்பிரதாயமாக இன்று ஆரம்பிக்கப்படும் ஐ. நா. பொதுச்சபைக்கூட்டம், திங்கட்கிழமைவரை ஒத்திப்போடப்படும். அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பேர்க் முதலாவதுபேச்சாளராகவிருப்பார்.

ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்துக்குச் செல்லும் இந்திய தூதுகோஷ்டிக்கு இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சக்ளா தலைமைதாங்குவார்.

### ஆக்கிரமிப்புக்கு கண்டனம்

இஸ்ரேல் ஆக்கிரமிப்பைக் கண்டனஞ் செய்யுமாறு எல்லா நாடுகளையும் சூடான் கேட்டுக்கொண்டுள்ளது.

புதுடில்லியில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டுத் தாயகம் திரும்பியுள்ள யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோவின் விசேஷ தூதுவர், பெல்கிரேட்டில் பத்திரிகையாளரிடம் பேசுகையில், தமது இந்திய விஜயத்தின் நோக்கம், மேற்குஆசிய நிலைமை பற்றி இந்தியத்தலைவர்களுடன் கலந்தாலோசனை செய்வதற்காகவே அமைந்ததாகக் கூறினுர். இந்தியத் தலைவர்கள் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைக் கண்டிப்பதாகவும் ஆக்கிரமிப்பின் பயன்களை ஆக்கிரமிப்பாளர் அனுபவிப்பதை அனுமதிக்க முடியாது என அவர்கள் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆந்திராவில் 'கேரோ'

ஹைதராபாத், ஜுன் 17

ஆந்திராவிலுள்ள ஓர் ஆலையின் முன்னுல், தொழிலாளர் 20 மணி நேரம், 'கேரோ' கிளர்ச்சி முறையைக் கையாண்டனர்.

ஆலையின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவரை வெளியேருதபடி தொழிலாளர் தடுதது நிறுத்தினர்.

பின்னர், பொலீசார் வந்து, தொழிலாளர்களைக் கலைத்தனர். இருவருக்குக் காயமேற்பட்டது. எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.

## மலேஷிய இராணுவ வீரருக்கு பயிற்சி அளிப்பதற்கு இந்தியா சம்மதம்

கோலாலம்பூர், ஜுன் 17

மலேஷிய இராணுவ வீரருக்கு மேலதிக பயிற்சி அளிக்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.

இந்தியாவில் வெலிங்டனிலுள்ள இராணுவக் கல்லூரியிலும், மற்றும் பயிற்சி நிலையங்களிலும் மேலதிகமாக இடமளிக்குமாறு மலேஷியா இந்தியாவைக் கேட்டிருந்தது.

ஏற்கனவே, மலேஷிய முப்படையைச் சேர்ந்த 13 வீரர், இந்தியாவில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## தூதர்களுக்கு சீன எச்சரிக்கை

பீகிங், ஜுன் 17

சீனச் செங்காவலாளரின் நடவடிக்கைகளைப் பற்றி அறிக்கை அனுப்பியோ, சுவரொட்டிகளைப் படம் பிடித்தோ, வேறு இத்தகைய நடவடிக்கைகளிலோ இறங்க வேண்டாமெனச் சீன வெளிநாட்டிலாக, அந்நிய நாட்டுத் தூதர்களுக்கு எச்சரித்துள்ளது.

### அதிகாரிகள் கொல்லப்பட்டனர்

இஸ்ரேல்—சிரியா எல்லைக்கருகில் இரண்டு ஐ நா. அதிகாரிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### அரபு மகாநாடு

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு பற்றியும், இழநதுள்ள அராபிய பிராந்தியங்கள் மீட்பது பற்றியும் விவாதிக்க அரபு நாடுகள் இன்று குவெயித்தில் கூடுகின்றன.

### காஷ்மீரில்

காஷ்மீர் பிரதமர் திரு. சாதீக், அரபுநாடுகளை இந்தியா பூரணமாக ஆதரிப்பதாகக் கூறியுள்ளார். இந்தியாவிலுள்ள அரபு லீக் கின் தலைவர் அவரைச் சந்தித்த பொழுது இவ்விதம் கூறியதாக வெளியிடப்பட்டது.

# 'பழைய எல்லைகளுக்கு இஸ்ரேல் திரும்பாது'

## பிரதமர் எஷ்கோல் அறிவிப்பு

இஸ்ரேல் பழைய எல்லைக்கோடுகளுக்குத் தனது துருப்புக்களை வாபஸ் பெறவேண்டுமென்ற ஆலோசனையை இஸ்ரேல் பிரதமர் திரு.எஷ்கோல் நிராகரித்துள்ளார்.

தாம் கைப்பற்றியுள்ள ஜெருசலத்தின் பழைய பகுதியை ஒருபோதும் விட்டுக் கொடுக்கமுடியாது என அவர் அறிவித்துள்ளார்.

இஸ்ரேலின் உண்மையான எல்லைகளும், இயற்கைப் பிராந்தியங்களும் இஸ்ரேலுக்கு உறுதியளிக்கப்படுவதையே இஸ்ரேல் விரும்புவதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

# ஐ. அ. கு. துருப்புகளுக்கு குடிதண்ணீர் உதவி

## அமெரிக்கா முன்வந்துள்ளது

சினுய் பாலைவனத்திலிருக்கும் ஐ.அ.குடியரசு துருப்புக்களுக்கு,பாரசூட் மூலம் குடிதண்ணீர் அளிப்பதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது. இச்செய்தியை அது, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அறிவித்துள்ளது. இந்த உதவியை ஐ. அ.கு.ஏற்ருல், அதை அளிப்பதற்குத் தயார் நிலையில் இருக்கும்படி அப்பகுதியிலுள்ள அமெரிக்க துருப்புக்களுக்கு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

### சுவீடன்,ரஷ்யா

ஜோர்தான், பாலஸ்தீன் அகதிகளின் உதவிக்காக 20லட்சம் டொலரை சுவீடன் அளிக்க முன்வந்துள்ளது. இஸ்ரேல் கைப்பற்றிய பகுதிகளிலுள்ள அராபிய மக்களின் நிவாரணத்துக்கென ரஷ்யா பொருளாகவும் பணமாகவும் 20லட்சம் டொலருக்கு சற்று குறைவாக அளித்துள்ளது.

# சீன தூதரகத்தின் ஜன்னல்கள் உடைந்தன

## ஆர்ப்பாட்டக்காரர் மீதான கல்வீச்சின் எதிரொலி

புதுடில்லி, ஜுன் 17

சீனத்தூதரகத்துக்கு முன்னுல் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள், நேற்று தூதரக ஜன்னல்களை உடைத்து விட்டார்கள்.

ஆர்ப்பாட்டம் முதலில் அமைதியாகவே ஆரம்பமாகி நடைபெற்றது. ஆனுல் சீனத் தூதரகத்திலிருந்து பூத்தொட்டிகளும், கற்களும் ஜனக்கூட்டத்தை நோக்கி எறியப்பட்டதுமே, நிலைமை மோசமாகியது. கூட்டத்திலிருந்தவர்களும் பதிலுக்குக கறகளை எடுதது வீசியதன் விளைவாகத தூதரக ஜன்னல்கள் உடைந்தன.

தூதரக ஊழியர்களில் எட்டுப் பேர் காயமடைந்ததாகத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர்கள் வைத்திய பரிசோதனைக்கும், சிகிச்சைக்குமாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஏழு ஆர்ப்பாட்டக்காரரும் காயமுற்றனர்.

பொலீசார் கூட்டத்தினர் மீது கண்ணீர்புகைப் பிரயோகம் செய்து, கூட்டத்தைக் கலைத்தனர். சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டப் பொலிசார் பெருமுயற்சி எடுத்தனர்.

இச்சம்பவத்தையிட்டு வருத்தம் தெரிவித்த இந்திய அதிகாரி ஒருவர், ஆர்பாட்டக்காரர் பலாத்காரத்தில் இறங்கும் வகையில் தூண்டப்பட்டனர் என்று குறிப்பிட்டார். தூதரகத்திலுள்ளவர்களின் செய்கையினுலேயே நிலைமை மோசமாகியதென்று கூறிய அவர், சீனுவில் இந்தியத் தூதுவர்கள் அவமானமான முறையில் நடாத்தப்பட்டதின் இயற்கையான பிரதிபலிப்பே இந்த ஆர்ப்பாட்ட எதிர்ப்பு எனவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் ஹைகமிஷனர் சம்பவம் நடைபெற்ற பின், சீனத்தூதரகத்துக்குச் சென்றிருந்தார்.

ஜம்முவிலும், மற்றப் பகுதிகளிலும் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

## கேரளத்துக்கு அரிசி

கொச்சின், ஜுன் 17

தாய்லாந்திலிருந்து 7,000 தொன் அரிசி கொண்ட கப்பல் ஒன்று, கொச்சின் துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது. இத்தொகை முழுவதும் கேரள ராஜ்யத்துக்கே அளிக்கப்படும் இம்மாதம், இதுவரை 16,000 தொன் அரிசி கேரளத்துக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பதுளை கச்சேரியில் இரண்டாவது காரியாலய உதவியாளராகக் கடமையாற்றி வந்த திரு. ரி. வேல்நம்பி நெடுந்தீவுக்கு காரியாதிகாரியாக பதவி உயர்த்தப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் நெடுந்தீவில் காரியாதிகாரியாகக் கடமையாற்றி வந்த திரு. அருணுசலம் பளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கொடிகாமம கொலைவழக்கு விசாரணை

சாவகச்சேரி, சனி

''சம்பவ தினம் நாங்கள் கள்ளுக் கொட்டிலில் இருக்கும் போது எதிரி வந்து கள்ளுக் கேட்டார். விற்பனையாளர் கள் இல்லைஎன்ற போது தனக்கு வழக்கமாகக் காலையும் மாலையும் கள் தரவேணுமென்றும் இப்போது ஏன தனக்கு இல்லையென்றும் ஏசினுர். நாங்கள் ஏன் சண்டைக்குப் போகிருய் எனத் தடுத்தும் பின் எதிரி கத்தியால் எனக்கு ஓங்கினுர். நான் கையால் பிடிக்க என் கையில் வெட்டியதும் நான் ஓடினேன். அங்கிருந்த என் அண்ணர் நாகமுத்துவை எதிரி கத்தியால் வெட்டினுர். அக்கத்தி ஒன்றரை அடி நீளமுடையது.''

கொடிகாமம் கொலை வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு.விக்னராசா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கெடுக்கப்பட்ட போது சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரர் கணபதி மயில்வாகனம் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ் வழக்கில் இவ்வருடம் ஏப்ரல் 17-ம் திகதி கொடிகாமத்தில் கணபதி நாகமுத்துவை [வயது40] என்பவரை சண்முகம் வல்லிபுரம் என்பவர் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாகச் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கணபதி சின்னத்தம்பி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-சம்பவ தினம் என் சகோதரர் மயில்வாகனம் என்னிடம் வந்து எதிரி வல்லிபுரம் எமது மூத்த சகோதரரைக் கத்தியால் வெட்டியதாகவும் தனக்கும் கையில் வெட்டு வீழ்ந்து விட்டதாகவும் கூறினுர். நான் சம்பவ இடத்திற்குப் போய் பார்த்து கள் விற்பனை செய்பவர் கூறிய திசைக்கு, இரத்தம் சிந்திய வழியே சென்று பார்த்தேன். அங்கு என் மூத்த சகோதரர் இடது தோளில் வெட்டுக் காயத்துடன் குப்புற நிலத்தில் கிடந்தார். மேல் விசாரணை இம்மாதம் 26-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## ரூ. 140 அபராதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடிசாராயம் வைத்திருந்ததற்காக கொக்குவிலைச் சேர்ந்த இருவருக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தலா 70ரூபா குற்றம்விதிக்கப்பட்டிருந்தது.

கொக்குவில் பொற்பதி வீதியைச்சேர்ந்த சின்னக்குட்டி வீரசிங்கம், மாணிக்கம் கிருஷ்ணபிள்ளை ஆகிய இருவர் மீதும் வடிசாராயம் வைத்திருந்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. ஜமீல் இருவருக்கும் தலா 70 ரூபா குற்றம் விதித்தார்.

[ந.நி]

## 11 பேர்கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

லைசென்ஸ் இல்லாது சீட்டு நடத்தியதாக நல்லூர் வைமன் வீதியைச் சேர்ந்த பொன்னுப்பழனி என்பவரையும் மேலும் 10 பேரையும்பொலிஸார்கைதுசெய்து பின்னர் பிணையில் விடுதலை செய்தனர்.

[ந.நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி விவசாயிகளுக்கு கேள்வி-பதில் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

விவசாய அபிவிருத்தியை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாணத்தில் 11 காரியாதிகாரிகள் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கிடையே யான விவசாயம் சம்பந்தப்பட்ட ''கேள்வி பதில்'' போட்டி ஒன்றை விவசாயப் பகுதி வெகு விரைவில் நடத்தவிருக்கிறது. இப் போட்டியில் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவில் இருந்தும் 3 ஆண், பெண் விவசாயிகள் அப்பகுதியின் காரியாதிகாரியினல் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு பிரிவில் இருந்து தெரிவு செய்யப்படும் போட்டியாளர்களுக்கிடையேயான விவசாய பயிர்ச்செய்கை சம்பந்தமான ''கேள்வி பதில்'' போட்டியை யாழ்ப்பாண விவசாயப் பகுதி நடத்தும். இப் போட்டிகளில் வெற்றி பெறும் முதல் மூன்றுபோட்டியாளர்களுக்கும் விவசாயப்பகுதி பரிசில்கள் வழங்கவிருக்கிறது. இப்போட்டியாளர்களுக்கிடையே நடைபெறும் இறுதி விவசாய 'கேள்வி பதில்' நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தில் ஒலிபரப்பப்படும்.

இதுபோன்ற மற்றும் ஒரு போட்டியை இளம் விவசாயிகள் கலந்து கொள்வதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் அதி விரைவில் நடத்தவிருக்கிறது.

## ''போஷாக்களிக்கும் பயிர்வகையை தெரிந்து பயிரிட வேண்டும்''

உடுவில், சனி

''1931-32-ம் ஆண்டில் நம்நாட்டை மலேரியா நோய் ஆட்கொண்டதனல் லட்சக்கணக்கான மக்கள் உயிர்விடும ஆபத்தான நிலை ஏற்பட்டது. இந்த ஆபத்தான நிலையை மக்களுக்கு உணர்த்தி ஆபத்திலிருந்துதப்பவைக்கும் நோக்கமாக ஆரம்பிக்கப்பட்ட மலேரியா வாரம் இன்று சுகாதாரவாரமாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. எமது நாட்டில் இன்று எத்தனையோ தொற்று நோய்கள் பரவாது மக்கள் பாதுகாப்புடன் இருக்க இவ்வகைவிழாக்களே காரணமாயிருந்தன. இதே வேளையில் சுகாதாரமாயிருப்பதோடு மக்கள் போஷாக்கான உணவு வகைகளை உற்பத்தியாக்கவும் வேண்டும்'' என்று உடுவில் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவுகளின் சுகாதார விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் கூறினர்.

மனித ஆரோக்கியத்துக்கு உணவும் போஷாக்கும் அவசியம். உணவுபற்றுக் குறையை நீக்க, அதிக உணவு பயிரீடும் இத்தருணத்தில் விவசாயிகள் போஷாக்களிக்கும் பயிர்வகைகளை தெரிந்து பயிரிடுதல் அவசியம். கால் நடைகள், கோழி முதலியவற்றையும் அதிக அளவில் பெருக்குவதன் மூலம் வெளிநாட்டு இறக்குமதிகளைப் படிப்படியாகக் குறைக்கமுடியும் என்றும் திரு. தருமலிங்கம் கூறினர்.

''மக்கள் ஆரோக்கியத்துடன் வாழ சத்துள்ள உணவு வேண்டும். நாகரீகவாழ்வை பின்பற்றி இன்றைய தாய்மார்கள் தம்பிள்ளைகளுக்கு பால் ஊட்ட மறுப்பது கொடுமையானது. ஐரோப்பிய நாடுகள்போலன்றி நம் நாட்டில் தாய்ப்பாசம் அதிகரித்திருப்பதற்குக் காரணம் புட்டிப்பாலை விடுத்து தாய்ப்பாலை அதிக அளவில் ஊட்டுவதே'' என உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் கூறினர்.

காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. சதாசிவம், சுன்னுகம் பட்டின சபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம், வலி-வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி திரு. ஆ. பொன்னுச்சாமி ஆகியோருட்பட வேறு பலரும்பேசினர்கள்.

உடுவில் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. அந்தோனிப்பிள்ளை நன்றி கூறினர்.

## சுழிபுரத்தில் சிறந்த குழந்தை

சுழிபுரம், சனி

சுழிபுரம் பொதுசௌக்கிய பரிசோதகர் வட்டாரத்தில்தேகாரோக்கியகுழந்தைகள்போட்டிமானிப்பாய் வைத்தியஅதிகாரி டாக்டர் எஸ். சின்னத்தம்பி தலைமையில் தொல்புரம் பாணுவெட்டி வைத்தியசாலையில் நடைபெற்றது. போட்டியில் நூற்றுக்கு அதிகமான பிள்ளைகள் பங்கு பற்றினர். போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் வருமாறு: மாசிலாமணி பத்மாவதி வரதராஜாமகேஸ்வரம் பண்ணுகம் நவரத்தினம் வர்னமகாராசா.

போட்டியில்வெற்றி பெற்றவர்களுக்கு சுழிபுரம் கிராசபைத்தலைவர் திருசு. கந்தசுவாமி பரிசு வழங்கினர்.

## டெலிபோனின்றி கஷ்டம

பூநகரி, சனி

பல்லவராயன்கட்டுப் பகுதியில் தொலை பேசி வசதியில்லாததால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டப்படுவதாயும், இக்குறையை நிவர்த்தி செய்துதருமாறும் பல்லவராயன்கட்டு மக்கள் கிளிநொச்சி எம். பி. யையும் வடபகுதி தபால் அத்தியட்சகரையும் கேட்டுள்ளனர்.

## மாணவர்கள் பணி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கன்னியர் மடம் தமிழ்ப் பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் தேசிய சேவை தினத்தையொட்டி தமது பாடசாலையில் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்தனர். ஆசிரியர் திரு. சு. அந்தோனிப்பிள்ளை தலைமையில் இம் மாணவிகள் இவ்வேலைகளைச் செய்தனர்.

பாடசாலைக் கட்டிடத்தை வெள்ளையடித்தல் தளபாடங்களைத் திருத்தல்போன்ற வேலைகளிலும் மாணவர்கள் ஈடுபட்டனர்.

## தீவுப்பகுதியில்பிரார்த்தனை கூட்டங்கள்

கொழும்பு, சனி

நயினை நாகபூஷணி அம்பாள் கோவில் உற்சவத்தையொட்டி கொழும்பிலிருந்து செல்லும் விசேஷ சமயப்பிரச்சாரக் குழுவினரால் நயினுதீவிலும் ஏனைய பல இடங்களிலும்பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நவாலியூர்
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியஐயர் அவர்கள்
கூறுகிருர்கள்:

சுந்தரம் பிறதர்ஸ்
ஸ்தாபனத்தாரால் விநியோகிக்கப்படும்

பச்சை சந்தனம்

கோவில் தேவைகட்கும்
மற்றும் மங்களக்காரியங்களுக்கும் சிறந்தது.
இறைவன் திருமேனியில்

சந்தனக் காப்பிட்டு

அவனின் திருவருளைப் பெறுவதற்கும்
சிறந்த வஸ்துவாக அமைகிறது.

சுந்தரம் பிறதர்ஸ்
(கோவில் அபிஷேக திரவிய வியாபாரிகள்)
73, மின்சாரநிலையவீதி — யாழ்ப்பாணம்.

இப்பொழுது நீங்கள் விரும்பும் இடத்தில்
வெற்றிகரமாக பயிர்செய்யலாம் எஸ்-லொன்
குழாய் நீரைக் கொணர்ந்து தரும்.



இன்று விவசாயத்துறையில் உலகமெங்கும் எஸ்-லொன் குழாய் முழுக்க முழுக்க உபயோகிக்கப் பட்டு வருகிறது

ஏற்ற இறக்க இடங்களுக்கு நீர்ப்பாய்ச்சுதல், சிதறித் தெளிக்கும் சேவைகள், உரப்பதார்த்தங்களை குழாய் மூலம் அனுப்புதல், கிருமி நாசினிகள் தெளித்தல், இன்னும் பல கனக்குறைவான, சுலபமாகப் பொருத்தும் குழாய்ப் பிரயோகங்களுக்கு எஸ்-லொன் மிகப் பொருத்தமானதாக விளங்குகின்றது அதன் பலமும், நீடியகால பாவிப்பும், கால வேறுபாட்டால் மாறுபடாத் தன்மையும் சேர்ந்து அதை விவசாயிகளின் முதல் தெரிவாக்குகின்றது

திறமையான இலவச தொழில்நுட்ப சேவைக்கு கலந்தாலோசிக்கவும்.

எஸ்-லொன் பி. வி. ஸி.
குழாய்களையே பாவியுங்கள்,
அவை உத்தரவாதமுடையவை,

மகாராஜா ஒகனைஷேசன் லிமிட்டெட், பாங்ஷால் வீதி, கொழும்பு 11. டெலிபோன்: 3603, 3634.
ராஜேந்திரம்ஸ் லிமிடெட்டின் வாரிசுகள்.



தண்ணீர்ச் சேவை,



மின் காவு குழாய்,

மழை நீர்க் குழாய்கள்,



கீழ்த் தரைக் குழாய்கள்

AJNS

எஸ்-லோன் ... பாவியுங்கள், அவை உத்தரவாதமுடையவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## அறிவித்தல்

**யாழ். விவாக அந்தியகால சேமலாப நிதிச் சங்கம்,**
**மும்ஸாக் மாளிகை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

இச்சங்கம் 5-9-56-ல் ஆரம்பிக்கப்பட்டு 11 வருடகாலமாக நடைபெறுகிறது. இன்றுவரை 1671 பேருக்கு அந்தியகால நிதியாக ரூபா 385291-08 சதமும், 976 பேருக்கு விவாக நிதியாக ரூபா 249678-02 சதமும், மொத்தம் ரூபா ஆறுலட்சத்து முப்பத்திநாலாயிரத்து தொளாயிரத்தி அறுபத்தொன்பது சதம் பத்து வழங்கியிருக்கிறது.

இச்சங்கத்தை அரசாங்கத்தில் பதிவு செய்யுமாறு எழுதியமனுவை இவ்வாண்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. விவாகப் பகுதிக்கு புது அங்கத்தவர்களைச் சேராமல் அந்தியகாலப் பகுதிக்கே 65 வயதிற்குட்பட்ட புதுஅங்கத்தவர்களைச் சேர்க்கிறோம். பொதுமக்கள் ஆதரவையும் மேலும் இச்சங்கம் வளர்ச்சியடையத்தொடங்கியதையுமிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

பிரவேசப் பணம் ரூபா 6/- மாதக்கட்டணம் ரூபா 3/-. அங்கத்தவர்கள் சேர்ந்து ஆறு மாதத்தின் மேல் உரிமைபெறலாம். அங்கத்தவர்களாகச் சேரவிரும்புவோர் காரியதரிசிக்கு விண்ணப்பியுங்கள்.

கிளைக்காரியாலயங்கள்:- அச்சுவேலியிலும், சுன்னுகத்திலும் இருக்கின்றன.

ஏஜென்ஸ்: 1. திரு. த. கந்தையா தெல்லிப்பளை, 2. திரு. ச. இராசேந்திரம் புத்தூர், செம்பியன்பற்று. 3. திரு. ச. குணரத்தினம், அராலி. 4. திரு. த. சி. கந்தையா, சாவகச்சேரி. 5. திரு. இ. சிவராமலிங்கஜயர், நெடுந்தீவு.

கரவெட்டி, தீவுப்பகுதி முதலிய பல இடங்களுக்கு ஏஜென்ஸ்மார் தேவை. ஏஜென்ஸியாக விரும்புவோர் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

| | | |
|---|---|---|
| மு. இராசரத்தினம் | அ. கார்த்திகேசு | சி. கிருஷ்ணர் |
| தலைவர். | காரியதரிசி. | தனாதிகாரி. |

2359

## அறிவித்தல்

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை கோவிற்பற்று பெரிய கலட்டி என்னும் காணியில் இருக்கும் வயிரவ கோவிலும் கிணறும் தனிப்பட்டவர்களுக்குரியது. பொது அல்ல என்பதை இத்தால் பொதுமக்கள் யாபேருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பொதுமக்கள் கோவிலுக்கு வந்து தரிசனம் செய்வதற்கு எந்தவித தடையும் ஏற்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
க, மு. சதாசிவம்
க. நாகநாதர்

2360

## திருத்தம்

**யாழ்ப்பாண மாநகர சபை**
**சோலைவரி**
**இரண்டாம் கந்தாயம்**
**1967**

எமது 10-6-67-ம் திகதிய அறிவித்தலின் 1-ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட 'முதலாம்' கந்தாயத்துக்கான என்று இருப்பது 'இரண்டாம்' கந்தாயத்துக்கான என்று திருத்தி வாசிக்கப்படவேண்டும்.

**கட்சன் செல்வராசா**
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16-6-67. 2361

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

லொறி

நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்டின் டீசல் [மொக்கன் மொடல்] லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விக்ரேஸ், 6, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 2439

காணி

யாழ்ப்பாண நகரில் நாலு புறமும் மதில் சுவரும் கிணறுமுள்ள ஆறுபரப்புக் காணி முழுவதும் முப்பதாயிரம் அல்லது விலை கேட்கவும். அரைவாசியும் வாங்கலாம். நேரில்வரவும். உரிமையாளர்: இ. செல்லதுரை, 271, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. 2446

டிராக்டர்

நல்ல நிலையிலுள்ள 22 ஸ்ரீ 6768 போட்சன் டிராக்ரர், 44 ஸ்ரீ 631 (பன்னிரண்டாணி)ற் றெயிலர், ரில்லர்-கலப்பை என்பன புதிய ரயர்களுடன் விற்பனைக்குண்டு. பொ. ஏரம்பு, 9 A, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 2444

### TO LET

House

Commodious Bungalow with 4 Bedrooms, attached Bathrooms and Garage etc. Electricity, Water service, and Drainage. Close toStanley College and Vigneswara Vidyalaya. Inquire from Mrs. S. K. Nalliah, 338 A, Navalar Road, Nallore South. 2449


## பரந்தன் — கிளிநொச்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி

உங்களுக்குத் தேவையான எல்லாவித மின்சார உபகரணங்கள் அனைத்தும் மொத்தமாகவும், சில்லறையாகவும் நிதானமானவிலையில் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும்

- றட்ஜ் சைக்கிள் (Rudge Cycle) வடபகுதி பிரதான விற்பனையாளர்.

இலங்கையில் தயாரிக்கப்படும் கீழ்க்காணும் சாமான்களுக்கு மொத்த விற்பனையாளர்:

- எஸ்-லொன், பீ. வீ. ஸி பைப்புகள்
- அஸோஸியேட்டட் கேபிள்ஸ் (Associated Cables)
- C. B. E. மின்சார பல்ப்புகள்

உங்கள் தேவைகளுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

வியாபாரிகளுக்கும், மின்சார இணைப்பாளர்களுக்கும் விசேஷ கமிஷன் வழங்கப்படும்.

# நியூரோன் எலெக்ட்றிக்கல்ஸ்

[புதிய பஸ்நிலையத்துக்கு முன்பாக]

228, ஆஸ்பத்திரிவீதி, (போன்: 7016) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அண்ணனை குத்திவிட்டு எதிரி உடனே ஓடிவிட்டார்"

## உடுவில் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு "எதிரி அண்ணனை குத்திவிட்டு உடனேஓடிவிட்டார். எதிரி என்னைப் பார்த்தாரா என்பதை என்னால் சொல்ல முடியாது. நான் எதிரியைப் பார்த்தேன். குத்த முன்பு எதிரி ஒழுங்கையில் இரண்டு பக்கங்களையும் பார்த்தார். அப்பொழுது ஒழுங்கையில் எதிரியும் அண்ணனும் நானும் தான் இருந்தேம். வேறு எவரும் இல்லை."

உடுவில் கொலை வழக்கில் காலஞ் சென்றவரின் தம்பி கந்தையா சாட்சியமளிக்கையில் மேற் கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்றுக் காலை இரண்டாவது தினமாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப் பட்டது.

இவ்வழக்கில் 65-ம் ஆண்டு டிசம்பர் 2-ம் திகதி வல்லி ஐயம்பிள்ளையை குத்திக் கொலை செய்ததாக தவசி கந்தையா மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அன்ரனி குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:

குத்து சம்பவம் நடந்த பின் ஆயுதத்திற்கு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. எதிரி அப்படியே ஓடிவிட்டார். ஆயுதம் சம்பவம் நடந்த இடத்தில் இல்லை.

வழ: எதிரி ஆயுதத்தை கொண்டு போனதை காணவில்லை? - இல்லை.

வழ: எதிரிக்கும் உங்கள் குடும்பத்திற்கும் உள்ள கோபம் காரணமாக பொய்யாக் கூறுகிறீர்? - இல்லை.

வழ சம்பவம் நடந்த தினம் அந்தநேரத்தில் எதிரி அவ்விடத்தில் நிற்கவில்லை என்கிறேன்? -நான் கண்டனன்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

## தாக்கியவருக்கு சிறை

வல்வெட்டித்துறை, சனி அல்வாயை அடுத்துள்ள திக்கத்தைச் சேர்ந்த சின்னையா நடராசா என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த வைரமுத்து சின்னத்துரை என்பவரின் குடை, பேனை ஆகியவற்றை கடந்த சித்திரை மாதம் 5-ந் திகதி பறித்து தாக்கியதாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் திரு. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் எதிரியான நடராசாவை குற்றவாளியாகக் கண்டு ஒரு மாதச் சிறைத்தண்டனை விதித்துள்ளார்.


## இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] ஈரோஸ் [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] மொடேர்ன் [பதுளை]
மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] தீவொளி [நுவரெலியா]
கல்யாணி [நாவலப்பிட்டி]

ஆகிய திரைகளில்

தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராச்கியது செல்வம்!!!

நடிக மன்னன் சிவாஜி கணேசன்,
நடிக ராணி கே. ஆர். விஜயா,
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா, நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்சின்

# செல்வம்


மானிப்பாய்

## அந்தோனியார் கோவில்

யாழ்ப்பாணம், ஞாயிறு மானிப்பாய் அர்ச் அந்தோனியார் கோவில் திருநாள் இம்மாதம் 16-ந் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இத்திருநாள் இம்மாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு பாடற்பூசையுடனும் சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவுறும் என்று மேற்படி கோவில் கட்டளை குருவானவர் அறிவிக்கிறார்.

---

9 மாதத்தின் பின்

## ஜீவனும்சம கோரி வழக்கு

காச்கேசன்துறை, சனி ஒன்பது மாத காலமாக கணவன் மனைவியாக வாழ்ந்தோம்' என்று பலாலி தெற்கைச் சேர்ந்த 26 வயதான மேரி யோகம்மா மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் ஜீவனும்சம் கோரி தொடர பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தெரிவித்தார்.

13-ந்திகதிநவம்பர் மாதம் 6-ம் ஆண்டு தான் ஜோன் கற்மிக்கர் என்பவரை விவாகம் செய்ததாகவும் 66-ம் ஆண்டு ஜுலை மாதம் 2-ந் திகதிவரை கணவன் மனைவியாக நடந்துகொண்டதாகவும் கூறினர். 15 மாத நோயாளிக் குழந்தையான அலஸ்கலியஸ் என்னும் ஒரு பிள்ளை இருவருக்கும் இருக்கிறதென்றும் கணவர் தங்கள் இருவரையும் கவனிப்பதில்லையென்றும் தனக்கு 50 ரூபாவும் நோயாளியான 15 மாதக் குழந்தைக்கு 25 ரூபாவும் ஜீவனும்சம் தரப்படவேண்டுமென்றும் இவர் கூறினர்.

கணவருக்கு நாளொன்றுக்கு 8 ரூபா வருமானமென்றும் யோகம்மா கூறினர். நீதிபதி பிரதிவாதிக்கு சமன்ஸ் அனுப்புமாறு உத்தரவிட்டார். மேல்விசாரணை இம்மாதம் 29-ந் திகதிக்குப்பின் போடப்பட்டது.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
FROM
CHINA with LOVE

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—பத்மினி
நடித்த
தூக்கு தூக்கி
[புதிய கொப்பி]

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி கணேசன்
லலிதா
நடித்த
வள்ளியின் செல்வன்

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
THE SPY WITH MY FACE


# போதிய ஊழியரில்லாததால் வரி வசூலிக்கப்படவில்லை

கொழும்பு, சனி போதிய ஊழியர்கள் இல்லாததால் வருமான வரியில் பெரும் தொகையான பாக்கிப்பணம் வசூலிக்கப்படாதிருப்பதாக வருமானவரி இலாகாகமிஷனர் திரு. எஸ். சிற்றம்பலம் அறிவித்துள்ளார்.

சென்ற நிதி வருடத்தில் சுமார் 23 கோடி ரூபா அறவிடப்படாத வரியாக இருந்ததாக கமிஷனர் தெரிவித்துள்ளார்.

வரவேண்டிய பாக்கிவரிகளை அறவிடுவதற்குப் போதிய குமாஸ்தாக்கள் தேவையென கமிஷனர்திரு, சிற்றம்பலம் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்தோனேஷியாவில்

## சீன உளவாளிகளுக்கு வலைவீச்சு

ஜாகர்த்தா, ஜூன் 17 இந்தோனேஷியாவில் உள்ள சீன உளவாளிகள் சுற்றி வளைத்துப்பிடிக்கப் பட்டுவருகிருர்கள்.

சீனஉளவாளிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதென இந்தோனேஷிய அரசாங்கம் அண்மையில் தீர்மானித்ததைத்தொடர்ந்தே இந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

## மதுமயக்கம்; கிடைத்தது அபராதம்

வல்வெட்டித்துறை, சனி வீரமுனி முகைதீன் என்பவர் நெல்லியடி பட்டினத்தில் குடிவெறியுடன் நின்று பொதுமக்களுக்கு இடைஞ்சல் விளைவித்த குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்டிரேட்டால் 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

---

## காயம் விளைவித்தார்

### அபராதம் ரூபா 50

வல்வெட்டித்துறை, சனி பருத்தித்துறை 2-ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த தமியான் மரியான் என்பவருக்கு படுகாயம் விளைவித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த அலேசு சூசை என்பவருக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிேட் 50 ரூபா அபராதம் விதித்து அதில் 25 ரூபாவை வழக்காளியான மரியானுக்கு கொடுக்கும்படியும் உத்தரவிட்டார்.

---

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### ஞாயிறு 18-6-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்புகள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 குரல்வகை, 6-30 நேயர் கடிதங்கள், 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர் கேட்டவை.

## கட்டாயமாக.....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனல் திருப்பி அனுப்பப்படவேண்டிய இந்தியவம்சாவழியினர் எவரும் மனுச் செய்யாமல்போனல் என்ன நடக்கும்? இதுவரை இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் சட்டம் எதுவும் இயற்றவில்லை. ஒப்பந்தத்தின்படி திருப்பி அனுப்புவதற்கு ஓரளவு பலவந்தம் பயன்படுத்துவதற்கு நமக்கு உரிமையிருக்கிறது. அதையும் பயன்படுத்த வேண்டும்.

திருப்பி அனுப்பப்படுபவர்களை இந்தியா ஏற்றுக் கொள்ளவேண்டும். மூன்றுவது நபரான திருப்பியனுப்பப்படுபவருக்கு இதில் சம்பந்தமில்லை.

இந்தக் கட்டத்தில் உள்ளுராட் மந்திரி திருச்செல்வம் மனித உரிமைமைகளுக்கு புறம்பான செய்கை இது என்று கூறினர்.

திரு. டொரிக்டி சூசா நாளைய தினமும் பேசுவார்.

---

## காதலன் கடிதம்..

1-ம்பக்கத் தொடர்ச்சி]

கடைசிச் சந்திப்பு. நான் நிம்மதியான வாழ்வை நாடிச் செல்கிறேன்" என்று கூறியதாகவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

தனது உடலில் மண்எண்ணையை ஊற்றித் தீ மூட்டிய நிலையிலேயே இம்மரணம் ஏற்பட்டதென்றும் கூறப்பட்டது. மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## மரண அறிவித்தல்

உடுப்பிட்டி அமெரிக்கன் கல்லூரி முன்னைநாள் ஆசிரியர் V. R. இராசரத்தினத்தின் பாரியாரும், தொண்டமானறு இந்துக் கல்லூரி முன்னைநாள் உப அதிபராகிய தவராசசூரியர், Uduvil Mann's பாடசாலை ஆசிரியை Mrs. மகேஸ்வரி துரைசிங்கம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை றேஸ் ஜெகராசசிங்கம், சென்ற். ஆஞ்ச் கல்லூரி ஆசிரியர் பரராசசிங்கம் ஆகியோரின் அருமைத் தாயாரும், அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி உப அதிபர் S. S. துரைசிங்கம், கூட்டுறவுப் பரிசோதகர் M. ஜெகராசசிங்கம், குலமணி தவராசசூரியர், விமலாவதி பரராசசிங்கம் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சொலமன் செல்லத்துரையின் மகளுமாகிய விக்ரோறியா தவமணி இராசரத்தினம் காலமாகிவிட்டார். அன்னரின் பிரேதசேம ஆராதனை அவரின் இல்லத்தில்இன்று(18-6-67) ஞாயிறு காலை 9 மணியளவில் நடைபெறும். 2363

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூன் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org